**தலைப்பு 243 – அபிவிருத்தி நிதி திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 243 – அபிவிருத்த நிதி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

### 2.1.1 மதிப்பீட்டினைத் தயாரித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 16 விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததனால் மொத்தமாக ரூபா 6,523,285,207 தொகை அதாவது 1 சதவீத்திலிருந்து 1424 சதவீதம் வரையான வீச்சில் நி.பி 66 இன் கீழான மாற்றங்களின் மூலம் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்து. | வேண்டிக்கொண்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமை, 2021 ஆம் ஆண்டிற்கான வட்டி நிவாரணத்தை 2022 முதலாவது காலாண்டின் போது சமர்ப்பித்தல் மற்றும் கிடைத்துள்ள அனைத்து வட்டி நிவாரணங்களுக்குமான கொடுப்பனவுகளை திறைசேரி பிணை முறியின் மூலம் தீர்த்துவைக்கப்பட்டதனால் அதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட வேண்டியிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினைத் தயாரித்தல் சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 14 செலவு விடயங்களின் தொடக்க மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தாமையின் காரணமாக மொத்தமாக ரூபா 6,729,319,236 தொகை அதாவது 1 சதவீத்திலிருந்து 81 சதவீதம் வரையான வீச்சில் நி.பி 66 இன் மூலம் நிதி ஏற்பாடு குறைக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான மதிப்பீட்டினுள் நிவாரண கொடுப்பனவிற்குரிய வேண்டுதல்கள் வங்கியின் மூலம் சமர்ப்பிக்காமை மற்றும் 2022 இறுதி காலாண்டிற்கான வட்டி நிவாரண வேண்டுதல்கள் 2023 முதலாவது காலாண்டின் போது சமர்ப்பித்தல் மற்றும் திறைசேரி பிணைமுறியின் மூலம் தீர்த்துவைக்கப்பட வேண்டிய ஏனைய செலவுத் தலைப்புக்களுக்குரிய நிவாரணக் கொடுப்பனவுக்குத் தேவையான நிதி ஏற்பாட்டினை வழங்க வேண்டியிருத்தல். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினைத் தயாரித்தலினை சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 243-1-1-45-1501-11 ஆம் இலக்க செலவு விடயமானது வருமானம் குறைந்த மக்களுக்கான உணவுப் பாதுகாப்புத் திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது தொடக்க மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்காததுடன் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 85,024,650 மற்றும் நி.பி 66/69 இன் கீழான மாற்றல்களின் மூலம் ரூபா 208,034,028 ஆக மொத்தமாக ரூபா 293,058,678 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | Covid – 19 தொற்றுநோய் காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை நிவாரண விலைக்கு விற்பனை செய்ததனால் உருவாகிய விலை வித்தியாசத்தினை மீளளிப்புச் செய்வதற்கான வேண்டுகோள் தாமதித்து எங்கள் திணைக்களத்திற்கு கிடைத்ததனால் மேலதிக நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினைத் தயாரித்தல் சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் செய்யப்படுதல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டிக் கோவையின் 7.10 ஆம் பந்தி | கணக்கு கூற்று இலக்கம் SA-II இன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவான ரூபா 12,356,010,353 தொகை கட்டுநிதி இணக்க கூற்றில் ரூபா 48,573,718,946 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கு கூற்று இலக்கம் SA-11 இன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 12,356,010,353 ஆக கட்டுநிதி இணக்க கூற்றில் காட்டப்பட வேண்டிய போதிலும் அதனை ரூபா 48,573,718,946 ஆகக் காட்டுவதற்கான காரணமாவது இந்திய கடன் வசதிகளுக்கான ரூபா 36,217,708,543 தொகை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட குறுக்குப் பதிவுகள் செம்மையாக்கல்கள் செய்யவேண்டியிருத்தல் என்பதனாலாகும். | அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சரியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 கடமைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்ட பின்வரும் நிறுவனம் மற்றும் செயற்திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையும் செயற்படு:ம் நிலைக்கு மாறியிருக்கவில்லை.<br>1. National Credit Guarantee Institution<br>2. ADB Rooftop Solar Power Generation Project (Phase II) | கருத்துரைகள் தரப்படவில்லை | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2. முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் ஈடுபாட்டின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படுகின்ற 18 நிதி நிவாரண கடன் திட்டங்கள் தொடர்பான 17 நிறுவனங்களுக்காக நிறுவனத்தினால் செலுத்த வேண்டிய வட்டியின் மொத்தம் ரூபா 1,902,415,907 தொகை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்காததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய நிதி நிறுவனங்களிடமிருந்து அந்த கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ள வட்டி தொடர்பான மீதியை உறுதிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது உறுதிப்படுத்தப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட மீதிக்கு இணங்க வேண்டிக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவில் வழங்கப்பட்டிருக்காததனால் பொறுப்புக்களாகப் பதிவுசெய்வதற்கு 2022 ஆம் ஆண்டில் மிகுதியாக உள்ள நிதி ஏற்பாடு போதியதாக இல்லை. | செலுத்த வேண்டிய வட்டி தொடர்பாக உரிய நிதி நிறுவனங்களிடமிருந்து மீதிகளை உறுதிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

### 4. மனித வளங்கள் முகாமைத்துவ

#### இணைத்துக்கொள்ளப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் வெற்றிடம் 08 ஆகக் காணப்பட்டதுடன் அதனுள் சிரேஷ்ட மட்டத்திலுள்ள வெற்றிடம் 04 ஆகும்.. | காணப்படுகின்ற வெற்றிடம் தொடர்பாக இணையவழி முறைமையின் மூலம் காலாண்டு ரீதியாக அரசாங்க நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. உரிய பிரிவிற்கு மீண்டும் ஒரு தடவை தெரியப்படுத்தி வெற்றிடத்தை முடியுமான அளவு விரைவாக நிரப்புவதற்கு குறித்துக்கொள்கிறேன். | முறைப்படியாக நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |